# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி(வரை), தருமபுரி

சுற்றறிக்கை எண். 078/2021

ந.க.எண். 196/2021(வளர்ச்சி) நாள். 21.12.2021

## சுற்றறிக்கை

பொருள் : மத்திய வங்கி - தலைமையகம் மற்றும் கிளைகளில் கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு கடன் வழங்குதல் - ஒழுங்குமுறை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது - நடைமுறைபடுத்த தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : 1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் (அலுவலக) கடிதம் ந.க.எண்.49858/2021மவகொ1 நாள்.01.11.2021-வுடன் வரப்பெற்றுள்ள அரசாணை எண்.88, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1) துறை, நாள். 21.10.2021.

2. கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர், தருமபுரி சரகம் கடிதம் ந.க.எண்.6630/2021/சப2, நாள். 09.12.2021.

-------------

பார்வை 1-ல் காணும் பதிவாளர் அவர்களின் கடிதத்துடன் தொடர்புறுத்தப்பட்டுள்ள அரசாணையில், கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு குறைந்த வட்டியில் குறைந்தபட்சம் ரூ. 5000/- முதல் அதிகபட்சம் ரூ. 25,000/- வரை ஆயிரத்தின் மடங்கில் கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளதற்கு இணங்க, வங்கியின் துணைவிதி எண் 18(J)-ல் கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு கடன் வழங்குவதற்கான ஒழுங்குமுறை விதிகள் பார்வை 2-ல் கண்டுள்ள கடிதம் வழி பதிவு செய்து வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே, இக்கடன் தொடர்பான வங்கியின் ஒழுங்குமுறை விதிகளுக்கு ஏற்ப கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு குறைந்தபட்ச கடன் தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முதல் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வரை ஆயிரத்தின் மடங்கில் கடன் கணக்கிடப்பட்டு கடன் வழங்கவும் தவணை காலமான 120 நாட்களுக்குள் (மாதம் இரண்டு முறை) வசூலிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கடன் 21.12.2021 (Widow and Destitute Women Product Code : 6192 0111) முதல் கிளை அளவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிளை மேலாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./-சு. இராமதாஸ்,

இணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர்.

**இணைப்பு :-**

துணைவிதி எண். 18 (J) நகல்

பெறுநர் :-

1. மேலாளர் (வங்கி), தலைமையகம்
2. அனைத்து கிளை மேலாளர்கள்

நகல் :-

1. இணைப்பதிவாளர், தருமபுரி/ கிருஷ்ணகிரி
2. துணைப்பதிவாளர், தருமபுரி/கிருஷ்ணகிரி/ஓசூர்
3. தலைவர், இணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், துணைப்பதிவாளர்/ முதன்மை வருவாய் அலுவலர் ,பொது மேலாளர்/ உதவி பொது மேலாளர்கள்
4. தணிக்கை பிரிவு, தலைமையகம்
5. அனைத்து பிரிவு மேலாளர்கள், தலைமையகம்
6. உட்பரிசோதகர், தருமபுரி /கிருஷ்ணகிரி

21/12/21

/உண்மை நகல்/ மேலாளர்(வளர்ச்சி)